பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 18உ (3—8—67) வியாழன் ★ வெளியூர்: ஆடி 19உ (4—8—67) வெள்ளி [இதழ்: 43

# 15,000 மணங்கு உணவுத் தானியம் பாழ்!

## கடும்பஞ்சம் நிலவும்போதும் அதிகாரிகளின் அலட்சியம்

### டெல்லிக்கு மேற்கு வங்க அமைச்சர் தகவல்

கல்கத்தா, ஆக. 2—

நாடே உணவுப் பஞ்சத்தால் அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலும் ஏராளமான உணவுப் பொருள்கள் அதிகாரிகளின் அலட்சியம் காரணமாகப் பாழாகிக்கொண்டு வருவதை மேற்குவங்கத் தொழிலாளர்நல அமைச்சர் சுபோத் முகர்ஜி மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன்றரை இலட்சம் மக்களுக்கு ஒரு வாரம் உண்ணப் போதுமான 15,000 மணங்கு உணவுப் பொருளகள் கல்கத்தா துறைமுகக் கிடங்கொன்றில் கடந்த 5 மாத காலமாக முடங்கிக்கிடப்பதாக அவர் கூறினர்.

இதுகுறித்து மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராமுக்கு அவர் அனுப்பிய கடிதமொன்றில் கோரியிருப்பதாவது :—

" இந்த உணவுப் பொருள்களை அழிவிலிருந்து காக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

" கடுமையான தண்டனை பெற வேண்டிய இக்குற்றத்தைச் செய்த அதிகாரி மீது விசாரணை நடத்த வேண்டும்.''

### உண்ணத் தகுதியற்றது

" வெளி நாடுகளிலிருந்து நிவாரண உதவியாகப் பெறப்பட்ட இந்த உணவுப் பொருள்களில் சுமார் ஐந்தில் ஒரு பகுதி, இப்பொழுதே மனிதர் உண்ணத் தகுதியற்றதாகப் போய்விட்டது ''

என்று பத்திரிகையாளரிடம் அவர் கூறினர்.

## இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் தமிழர்கள்

### மறுவாழ்வளிக்க ரூ. 37 கோடி

புதுடில்லி, ஆக. 2—

" இலங்கையிலிருந்து திரும்பவிருக்கும் 5.25 இலட்சம் இந்திய மரபினருக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு சுமார் ரூ. 37 கோடி செலவாகும் ''

என்று, மத்திய மறுவாழ்வளிப்பு அமைச்சகம் மதிப்பிட்டிருக்கிறது.

அடுத்து ஆண்டு துவக்கத்திலிருந்து முதல் 15 திங்களில் 60 ஆயிரம் பேர் இந்தியா திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு திட்டத்திலும் குடியமர்த்தப்பட வேண்டிய இந்தியர்களின் எண்ணிக்கை—ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்கள் குடியேற வேண்டிய இடங்கள்—ஆகியவை தொடர்பாக அமைச்சகம் ஏற்கனவே திட்டங்களை வகுத்திருக்கிறது.

## ரூ. 5.50 லட்சம் செலவில் 96 பக்கப் புத்தகமா?

### கன்னட அகராதித் தயாரிப்பின் பெயரால் ஊழல்!

### சட்டமன்றத்தில் வெளியான தகவல்—காங்கிரசு அமைச்சருக்குத் தெரியாதாம்!

கன்னடத்தில் ஓர் அகராதியை உருவாக்குவதற்காக மைசூர் மாநில அரசு, கன்னட 'சாகித்ய பரீட்சத்' என்ற இலக்கியச் சங்கத்திற்கு ரூ. 15 இலட்சத்தைத் தர ஒப்புக்கொண்டது.

'மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் வேலை முடிய வேண்டும்' என்பது ஒப்பந்தம்; ஆனால் இன்று வரை அரசிடமிருந்து ரூ. 5½ இலட்சம் பெற்றுக்கொண்டு இந்தச் சங்கம் 96 பக்கங்களைத்தான் வெளியிட்டுள்ளது.

மைசூர் மாநிலச் சட்டமன்ற மேலவையில் பேசிய ஓர் உறுப்பினர், 'அகராதியை உருவாக்குவதற்காகத் தரப்பட்ட தொகையை இந்தச் சங்கம் வேறு பணிகளுக்காகச் செலவிட்டுவிட்டதாக அரசாங்கத்தின் கணக்காய்வுத் துறை குறிப்பிட்டுள்ளது; அரசுக்குத் தெரியுமா?' என்று கேட்டபோது, 'தெரியாது' என்று விடையளித்தார் மாநில கல்வியமைச்சர்.

—'டெக்கான் ஹெரால்டு'

## அறிஞர் அண்ணுவின் புரட்சிகரத் திட்டம்

### முன்னுள் காங்கிரசு முதலமைச்சர் பாராட்டு

புவனேசுவர், ஆக. 2—

ஒரிசா மாநில முன்னுள் காங்கிரசு முதலமைச்சரான பிரேன் மித்ரா, ஒரிசா சட்டமன்றத்தில் பேசுகையில், தமிழக முதலமைச்சர் 'அண்ணு அவர்களின் திறமையைப் பாராட்டிப் பேசினர்.

தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்கள், நிர்வாகத்தைத் திறமையாக நடத்திக்கொண்டு வருகிருர் என்றும், படி அரிசித் திட்டம் விலையைக் குறைக்கும் நடவடிக்கையில் புரட்சிகரமானதென்றும், ஒரிசா அரசும், கட்டாக், மற்றும் ஏனைய நகரங்களுக்குக் குறைந்த விலையில் அரிசி விநியோகிக்க முன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

## ஊழல் புரிந்த அதிகாரிமீது நடவடிக்கை

பாட்ஞ நகர வளர்ச்சிக் கழகத்தில் தலைமை எஞ்சினீயராக இருந்த ஒருவரை, பீகார் அரசு தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்துள்ளது.

இரண்டு இலட்சம் ரூபாய் சம்பந்தமாக முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக நகர வளர்ச்சிக் கழகம் அரசுக்குத் தகவல் தந்ததையொட்டி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, பீகார் சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிருர்.

## 'ராக்கிங்' செய்த மாணவர்கள் மீது நடவடிக்கை

திருச்சி, ஆக. 2—

இரு பொறியியல் கல்லூரிகளில் புதிய மாணவர்களை ஏளனம் செய்து துன்புறுத்திய (ராக்கிங்) பழைய மாணவர்கள் 25 பேரை கல்லூரிகளிலிருந்து நிறுத்தி வைத்து, கல்லூரிகளின் முதல்வர்கள் உத்தரவிட்டதைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுதி செய்தது.

கோவையில் ஒரு பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 16 மாணவர்கள் நிறுத்தப்பட்டார்கள்; இவர்களில் ஒருவர் மூன்ருண்டும், மற்ருெருவர் இரண்டாண்டும் நிறுத்திவைக்கப்பட்டனர்.

இதே கல்லூரியைச் சேர்ந்த மற்றும் மூன்று மாணவர்கள் இந்தக் கல்வியாண்டு முடியும் வரையிலும், இன்னும் 11 மாணவர்கள் 21—7—67 முதல் 10—9—67 வரையில் நிறுத்தப்பட்டனர்.

இப்படி நிறுத்தப்பட்ட மாணவர்கள் கல்லூரி விடுதிகளிலிருந்தும் வெளியேற்றப்பட்டனர். எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் மீண்டும் விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

சென்னை கிண்டி ஏ. சி. தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்கள் ஆகஸ்டு முதல் நாள் முதல் நிறுத்தப்பட்டனர். இவர்களில் ஒரு மாணவர் ஒரு கல்வியாண்டுக் காலத்துக்கும், மூன்று பேர் ஒரு திங்கள் காலத்துக்கும், மற்றும் 5 மாணவர்கள் ஒரு வார காலத்துக்கும் நிறுத்திவைக்கப்பட்டனர்.

## 'அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும்'

### ஆட்சி மொழி பற்றித் தமிழக அரசின் கருத்து

### டில்லி அரசிடம் மீண்டும் வற்புறுத்தல்

சென்னை, ஆக. 2—

"காலஞ்சென்ற தலைமை அமைச்சர்களான பண்டித நேருவும், லால்பகதூர் சாஸ்திரியும், இந்தி பேசாத மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றும் முறையிலும், தமிழக மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையிலும், இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வழி செய்யும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்'' என்ற தனது கோரிக்கையை தமிழக அரசு மீண்டும் வற்புறுத்தியிருக்கிறது.

மத்திய அரசால் உருவாக்கப்பட்டு, தமிழக அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ஆட்சி மொழித் திருத்த மசோதாவின் எல்லா அம்சங்களையும் தமிழக அரசு ஆராய்ந்துவிட்டது.

" இந்தி மொழி சம்பந்தமாகவும், ஆட்சிமொழி சம்பந்தமாகவும் தி.மு. கழகம் வெளியிட்டுவந்திருக்கும் கொள்கைகளுக்கு ஏற்ப மசோதாவில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும்'' என்று தமிழக அரசு வற்புறுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

" இம்முறையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவது ஒன்றுதான், தமிழக மக்களைத் திருப்திப்படுத்தும் வழி'' என்றும் மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கக்கூடாதென்றும், ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருந்துவர வேண்டுமென்றும், இந்தியாவின் 14 தேசிய மொழிகளுக்கும் ஆட்சிமொழித் தகுதி தரவேண்டுமென்றும் தி. மு. கழகம் வற்புறுத்திவருவது தெரிந்ததே.

## கடலூரில் பதுக்கல் வேட்டை

### 1,050 நெல் மூட்டை பறிமுதல்

கடலூர், ஆக. 2—

கடலூரில் 4 அரிசி ஆலைகளை சென்னை கண்காணிப்புப் பிரிவு அதிகாரிகள் சோதனையிட்டு 1,050 நெல் மூட்டைகளைக் கைப்பற்றினர் என்றும் இது பற்றி விசாரணை நடந்துவருவதாகவும் தென்னாற்காடு மாவட்டஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

## இந்திரா காந்தி வருகைக்கு செலவான தொகை

### காங்கிரசு கட்சியிடம் வசூலிக்க பீகார் அரசு நடவடிக்கை

புவனேசுவர், ஆக. 3—

"கடந்த பொதுத் தேர்தலின் போது காங்கிரசுக்குப் பிரச்சாரம் செய்ய ஒரிசாவுக்குத் தலைமையமைச்சர் வந்த சமயத்தில், ஒரிசா அரசு செலவிட்டிருக்கும் ரூ. 46,000-ஐ உத்கல் காங்கிரசுக் கட்சியிடமிருந்து வசூல் செய்வதற்குச் சட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளக்கூடும்'' என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் சிங் தேவ் கூறினர்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. (ஆனர்ஸ்)

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 18 (3—8—67) வியாழன்

# ஒன்பதாவது அமைச்சரவை

மத்தியப் பிரதேசத்தில் காங்கிரசு ஆட்சி கவிழ்க்கப்பட்டுவிட்டது. துவாரக பிரசாத் மிஸ்ராவும் முதலமைச்சர் பதவியிலிருந்து விரட்டப்பட்டுவிட்டார்.

ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரசுக் கட்சி விரட்டப்பட்டு விட்டாலும், 'ஆட்சிப் பொறுப்பு எதிர்க் கட்சியிடம ஒப்படைக்கப் படக்கூடாது; சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்த ஏற்பாடு செய்ய முயலுவேன்' எனப் பிடிவாதமாகப் பேசி வந்தார் மிஸ்ரா. அதற்கு அவர் சொன்ன காரணம் எல்லாம் ஒன்றே ஒன்றுதான்; அதாவது காங்கிரசு வேட்பாளராகத் தேர்தலில் நின்று வெற்றிபெற்று—பின்னர் எதிர்க் கட்சியுடன் சேர்ந்து கொண்டு ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு—ஆட்சிப் பொறுப்பை ஏற்படுத்துகின்ற கட்சித் 'துரோகிகள்' தாங்கள் செய்துள்ள துரோகத்தின் இலாபம் பெறுவதை அனுமதிக்கக்கூடாது என்பது தான்.

இந்த வாதத்தை நிறைவேற்ற-சட்டமன்றத்தில் தோல்வி ஏற்பட்டதும்–'சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு, மறு தேர்தலுக்கு ஏற்பாடு செய்யும்படி பரிந்துரைக்கவேண்டும்' என, மாநில ஆளுநரைத் தாம் கேட்டுக்கொள்ளப்போவதாக மிஸ்ரா கூறி வந்தார்.

மிஸ்ராவின் இந்தப் போக்கை, தலைமையமைச்சரும், உள் துறை அமைச்சரும் ஆதரித்தனர்; ஆனால் சட்ட அமைச்சரோ 'சட்டமன்றத்தில் தோல்விகண்ட முதலமைச்சர், சட்டமன்றத்தைக் கலைத்துவிடப் பரிந்துரைக்கும்படி ஆளுநரைக் கோருவதற்கு உரிமை கிடையாது' எனக் கருத்தறிவித்தார்.

மத்திய அமைச்சரவைக்குள்ளாக ஏற்பட்ட இந்த இரண்டு கருத்துக்களில் எது சரியானது என்பதைக் கூறும்படி, அரசாங்க வழக்கறிஞர் கோரப்பட்டார்; அவர், 'சட்ட அமைச்சர் கொண்டுள்ள கருத்தே சட்டப்படி முறையானதாகும்' எனக் கூறிவிட்டார்.

இதே நேரத்தில், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் 'சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தவேண்டும்' என்ற மிஸ்ராவின் கருத்தை ஏற்க மறுத்துவிட்டார். 'சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தப்பட்டாலும், காங்கிரசுக் கட்சிக்கே மீண்டும் பெரும்பான்மை கிடைக்கும்' என மிஸ்ரா நம்பிக்கைக் கொண்டிருப்பதுபோல், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவரால் நம்பிக்கை கொள்ளமுடியவில்லை. 'இப்பொழுது இருக்கக்கூடிய எண்ணிக்பை பலத்தையும், காங்கிரசுக் கட்சி இழந்து விடுமோ' என்ற சந்தேகம் காங்கிரசுத் தலைவருக்கும்!

எனவே, 'மறுதேர்தல் நடத்த வேண்டும்' என்ற மிஸ்ராவின் போக்கை ஆதரிக்க விரும்பாது, பதவியைவிட்டு விலகிவிடும்படி, மிஸ்ராவுக்கு அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் கட்டளை பிறப்பித்தார். அக்கட்டளையை ஏற்று, வேண்டா வெறுப்பாக ஆட்சிப் பொறுப்பிலிருந்து மிஸ்ரா இப்பொழுது விலகிக்கொண்டுவிட்டார்.

மிஸ்ரா பதவித் துறப்பின் உண்மை இவ்வாறு இருக்க, 'சனநாயக முறைக்கு மதிப்பளித்தே ம. பி. காங்கிரசு அமைச்சரவை பதவியிலிருந்து விலகியிருக்கிறது' எனக் கூறத் துணிவது, நகைப்புக்குரியதாகும். அப்படிக் கூறுவது, முதல்தரமான அரசியல் மோசடியாகும்.

'சனநாயக மரபுகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ள வேண்டும்' என்ற நினைப்பு மிஸ்ராவுக்குக் கடுகளவாவது இருந்திருக்கும்பட்சத்தில், அவர் எப்படிச் செயல்பட்டிருக்க வேண்டும்? சட்டமன்றத்தில் காங்கிரசுக் கட்சி பெரும்பான்மையை இழந்து விட்டது என்ற செய்தியைத் தாம் தெரிந்து கொண்டவுடனேயே முதலமைச்சர் பதவியைத் துறந்திருக்க வேண்டும்; அமைச்சரவையைக் கலைத்துவிட்டு, புதிய அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பை எதிர்க் கட்சித் தலைவரிடம் ஒப்படைக்கும்படி ஆளுநரைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். இப்படி அவர் செய்திருக்கும்படசத்தில், மிஸ்ராவை, 'உண்மையான சனநாயக மரபுகளில் நம்பிக்கையுடையவர்' எனக் கொள்ளமுடியும்; 'கடைந்தெடுத்த சனநாயகவாதி' என்றும் அவரைப் பாராட்டி இருக்க முடியும்.

ஆனால் மிஸ்ராவோ, சனநாயக மரபுகளுக்கு மதிப்பளித்துச் செயல்படக்கூடியவராக இல்லை. தாம் இழந்துவிட்ட பதவியை எதிர்க் கட்சியினர் பெறவிடுவதா என்ற முறையிலேயே அவர் செயல்பட்டிருக்கின்றார்.

துவாரக பிரசாத் மிஸ்ராவையும், அவருடைய காங்கிரசு அமைச்சரவையையும் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விரட்ட, ஆரம்ப முதலே அரும்பாடுபட்டு வந்திருக்கின்றார்—ம. பி. சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரான இராஜமாதா விஜயராஜ் சிந்தியா.

புதிய அமைச்சரவையை அமைக்கும்படி இராஜ மாதாவை, ஆளுநர் அழைத்தார்; அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு இராஜ மாதா, ஆளுநரைச் சந்தித்து, காங்கிரசுக் கட்சியிலிருந்து வெளியேறித் தமது எதிர்க் கட்சியில் இடம் பெற்றிருக்கின்ற கோவிந்த நாராயண சிங்கை அழைத்து, அமைச்சரவை அமைக்கும் பொறுப்பை ஒப்படைக்கும்படிக் கோரினார்; ஆளுநரும் அதற்கு இணங்கினார்.

காங்கிரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய ஒருவரைக் கொண்டு, எதிர்க் கட்சி அமைச்சரவையை அமைக்க இராஜமாதா மேற்கொண்ட முயற்சி, பொருள் நிரம்பியதாகும். இராஜமாதாவின் முடிவு பாராட்டுதற்குரியதாகும்

கோவிந்த நாராயண சிங் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசல்லாத அமைச்சரவை மத்தியப் பிரதேசத்தில் அமைந்திருக்கிறது. :சம்யுக்த விதாயக் தள அமைச்சரவையுடன், காங்கிரசல்லாத அமைச்சரவைகளின் எண்ணிக்கை ஒன்பது ஆகும். மொத்தம் உள்ள பதினெரு அமைச்சரவைகளில் காங்கிரசுக் கட்சி அமைச்சரவைகள் எட்டே எட்டுதான். மக்கள் தொகையிலும் மூன்றில் இரண்டு பகுதி மக்கள், காங்கிரசு அல்லாத அமைச்சரவைகளை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

**சின்ன விஷயம்**

# தேளுக்குக் கொடுத்த மணியம்!

நல்ல காரியங்கள் நடக்க வேண்டுமென்று கோரிப் போராட்டங்கள் நடத்துகிறார்களே—அது ஒருவகை; நடைபெறும் நல்ல காரியங்களைத் தடுத்திடப் போராட்டம் நடத்துவதும் சிலருக்குப் பொழுதுபோக்கு!

பீகார் மாநிலத்தில் உருது பேசுகிற மக்கள் கணிசமான அளவில் இருப்பதால், 'உருது மொழிக்கு மாநில அளவில் இரண்டாம் ஆட்சி மொழித் தகுதி தரலாம்' என்று ஐக்கிய முன்னணி அரசு கருதியது,

ஐக்கிய முன்னணி அரசின் இந்தக் கொள்கையை, துணை முதலமைச்சர் கர்பூரி தாகூர் என்பவர் செயல்படுத்த முனையும்போது, கச்சை கட்டிக் கிளம்பிவிட்டார்கள்—இந்தி வெறியர்கள்!

இந்திதான் பீகாரின் மாநில ஆட்சிமொழி; அதில் சிக்கல் ஏதும் இல்லை. அத்துடன், உருதுவையும் துணை ஆட்சி மொழியாக மாநில அளவில் ஆக்குவதற்கே இந்தத் தகராறு!

இராயர் ஏறின குதிரைக்கு மேடு ஏது? பள்ளம் ஏது?

**தேர்தல் நேரத்தில்—தேர்தலுக்குப் பத்து நாள் முன்னதாக—ஒரு வாரம் முன்னதாக—இந்திரா அம்மையார் வலிந்து வலிந்து உருதுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார்கள்; வாக்குறுதிகள் வழங்கினார்கள்;—'காங்கிரசு பொறுப்பில் இருக்கிறவரை உருது பேசுகிறவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் உண்டு; அரசியலில் -- ஆட்சி நடைமுறையில் -- உரிய இடம் தரப்படும்' என்றெல்லாம் பேசியதை, இதழ்கள் கொட்டை எழுத்தில் செய்திகள் வெளியிட்டன! தேர்தல் நேரத்து வாக்குறுதி அது!**

காங்கிரசு, ஆட்சியில் இருந்திருந்தால் தலைமை அமைச்சரின் மானத்தைக் காப்பாற்ற உருதுவுக்கு உரிய இடம் தரப்பட்டிருக்க வேண்டும். அதையேதானே ஐக்கிய முன்னணி அரசும் செய்கிறது! அதற்கு அடித்துப் புடைப்பானேன்—அங்கலாய்த்துக் கொள்வானேன்!

**'கள்ள விசுவாசம் கழுத்தெல்லாம் ஜெபமாலை'** என்கிறார்களே—அது, காங்கிரசுக்காரர்களுக்கு மெத்தப் பொருந்தும்! அவர்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறவர்கள்!

இந்தி எதிர்ப்பு வலுவாக இருக்கிற நேரத்தில், 'இந்திக்கு மட்டுமன்றி எல்லா மாநில—தேசிய மொழிகளுக்கும் உரிய இடம்—சம வாய்ப்புத் தரப்படும்' என்று பேசிவிட்டு, பேசிய பேச்சின் ஒலி மங்கும் முன்னரே மற்ற மொழிகளை அழிக்கும் வேலையிலும் ஈடுபடுகிறார்கள்!

'இந்திக்காரன்' என்ற ராஜ முத்திரை இருக்கிற போது, தலைக்குத் தலை நாட்டாண்மை இருக்கவே செய்யும்!

**தாய் நிலமற்ற இந்தி—உருது இரண்டு மொழிகளுமே நடு இந்தியாவில் முன்னர் வழங்கிய 'ஜபான்—ஈ—ரக்தா' என்ற கலவை மொழியில் கருவுயிர்த்தவை!**

**ஜபான்—ஈ—ரக்தாவுடன் பாரசீகச் சொற்கள் கலந்து, உருது ஆயிற்று! வடமொழிச் சொற்கள் கலந்து இந்தி உருவாயிற்று!**

உருதுவை முஸ்லிம்கள் பேசினர். இந்தி மொழி, 'இந்து'க்களிடையே பயின்று வந்தது; அவ்வளவுதான்—இது, மொழி அறிஞருக்குப் பால பாடம்!

சிறுபான்மை மொழிகளுக்கேகூட ஒப்புதல் அளித்துக் குறிப்பிட்ட பகுதிகளில் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படும் இந்த நாட்களில், காங்கிரசுக்காரர்களின் இத்தகைய இந்தி வெறி, இந்தியாவின் ஐக்கியத்தை அறைகூவிக் கொண்டிருக்கிறது!

பீகார் அரசின் முடிவை எதிர்த்து மாநிலங்களவையில் ஒரு போராட்டமே நடக்குமாம். அதுவும், முன்னாள் காங்கிரசு அமைச்சரவையின் சபாநாயகர் இலட்சுமி நாராயண் சுதான்சு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு! இந்தி வெறியர்களான சேத் கோவிந்ததாஸ், பிரகாஷ்வீர் சாஸ்திரி போன்றவர்களை அழைத்து மாநிலமெங்கும் கூட்டங்கள் நடத்துவார்களாம்!

உருதுவுக்கு உரிய இடம் இல்லாதிருந்து அதற்காகப் போராட்டம் நடந்தால், அர்த்தம் இருக்கும்! இந்தியின் தகுதி பறிக்கப்பட்டிருந்து இந்திக்காரர் போராட்டம் நடத்தினால் நியாயம் உண்டு!

இப்படி எதுவும் இல்லாமல், உருதுவுக்கு இரண்டாம் ஆட்சி மொழித்தகுதி தரப்படுகிறதென்று முதல் ஆட்சி மொழிக்காரர்கள் இடித்துக் கொள்வானேன்?

தேளுக்கு மணியம் கொடுத்தால், பொழுது விடியுமட்டும் நிமிடத்துக்கு நிமிடம் கொட்டுமாம்! இந்தி வெறியர்கள் நிலையும் அதுதான்!

மொழிப் பிரச்சினை, இந்தியத் துணைக்கண்டத்தைப் பீடித்திருக்கும் நோய்! எளிமையான—இயற்கையான பரிகாரங்களை விட்டு எதை எதையோ தேடித் திணிக்கிறார்கள் ஆட்சியாளர்கள்!

**'வைத்தியர் பிள்ளை நோயினால் சாகாது—மருந்தினால்தான் சாகும்' என்பார்கள்! அது இங்கே உண்மையாகிறது!**

—பூரணன்

## உறுதிமொழியைக் காப்பாற்றவில்லை

### டில்லிமீது கேரளக் குழு குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 1—

கேரள முதலமைச்சர் தலைமையில் இங்கு வந்துள்ள உணவு தூதுக் குழுவினர், மொத்தத்தில் டில்லியில் தங்களுக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இங்கு வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் குழு, தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற மத்திய அரசு தவறிவிட்டது' என்று எடுத்துக் கூறியிருக்கிறது.

## பம்பாயில் உள்ள பிரிட்டிஷ் நூலகம்

நடைமுறையில் இந்தியாவின் இணைப்பு மொழியாகவும்,அனைத்துலக மொழியாகவும் பயன்பட்டு வருகிற ஆங்கிலத்திற்கு உலகெங்கிலுமுள்ள பிரிட்டிஷ் கௌன்சில் நூல் நிலையங்கள் அருமையான முறையில் பணியாற்றி வருகின்றன.

பம்பாயிலுள்ள இதன் நூலகத்தில், 48,000 நூல்களும் 200 செய்தித் தாள்களும் உள்ளன.

55 நாடுகளிலுள்ள இதன் 123 நூலகங்களில், மிக அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளப்படும் நூலகம் இதுதான் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## குட்டுப்பட்டும் திருந்தவில்லை!

### சொந்தக் கட்சியையே சாடுகிறார் காங்கிரசு எம்.எல்.ஏ.

சண்டிகார், ஆக. 2—

"ஒவ்வொரு இடத்திலும் அடுத்தடுத்து காங்கிரசு தோல்வியைச் சந்தித்தபோதிலும், காங்கிரசு இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை" என்று காங்கிரசு சட்டமன்றச் உறுப்பினரான திரு. சத்யபால் என்பவர் கூறினார்.

"மாநிலக் காங்கிரசுக் குழுவுக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதில் பல ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருக்கின்றன; கட்சியிலிருந்து ஊழல்—போலி — கருப்புச் சந்தைக் காங்கிரசு உறுப்பினர்களை களையெடுக்க காங்கிரசுத் தலைவர்கள் தவறிவிட்டார்கள்" என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

## நீலகிரியில் இந்திய--ஜெர்மன் கூட்டுப் பண்ணைத் திட்டம்

மேற்கு ஜெர்மனியிலிருந்து ரூ. 9,50,000 மதிப்புள்ள உரங்கள் —பூச்சி மருந்துகள் — பண்ணைச் சாதனங்கள் ஆகியவை வந்து சேர்ந்துள்ளதைத் தொடர்ந்து, நீலகிரியில் இந்திய -- மேற்கு ஜெர்மன் ஒத்துழைப்பிலான விவசாயத் திட்டத்தின் கள வேலைகள் விரைவில் ஆரம்பமாகிவிடும்.

## அரிசிப் பற்றுக்குறை

### இந்திய அரசின் நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 2—

அரிசிப் பற்றுக்குறை கடுமையாக இருப்பதால், கிடைக்கக் கூடிய இடங்களிலிருந்தெல்லாம் இந்திய அரசினர் அரிசி வாங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அண்மையில், 5,000 டன் அரிசி வாங்குவதற்காக சிங்கப்பூர் அரசுடன் பேரம் நடத்தப்பட்டது.

தாய்லாந்திலிருந்து இந்தியா ஏற்கனவே 10,000 டன் அரிசி வாங்கியிருக்கிறது; அர்ஜெண்டைனாவிலிருந்து 7,000 டன் அரிசி பெற்றிருக்கிறது.

## கள்ளக் கடத்தல் வேட்டை

### கோவை மாவட்டத்தில் மட்டும் ரூ. 2.69 இலட்சம்

கோவை ஜூலை 31—

உணவுப் பொருள்சள் சம்பந்தப்பட்ட குற்றங்களைத் தடுக்க எடுத்த தீவிர நடவடிக்கையின் காரணமாக கடந்த ஜூன் திங்களில் ரூ. 2.69 இலட்டம் மதிப்புள்ள உணவுத் தானியம் கோவை மாவட்டத்தில் மட்டும் கைப்பற்றப்பட்டது.

சட்டபூர்வமான பங்கீட்டுமுறை உள்ள பகுதிகளில் நடத்திய பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 11,000 போலிப் பங்கீட்டு கார்டுகள் நீக்கப்பட்டுள்ளன.

ஒரு பெண்ணிடம் அடகுவைக்கப்பட்டிருந்த 45 பங்கீடு அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

# இரண்டேகாலாண்டில் ரூ. 4.32 கோடி !

## உணவுக் கார்ப்பொரேஷனின் நிர்வாகச் செலவு

புதுடில்லி, ஆக. 1—

“கடந்த இரண்டேகால் ஆண்டுகளில் உணவுக் கார்ப்பரேஷன் தனது நிர்வாகச் செலவுக்காக ரூ. 4.32 கோடி செலவிட்டிருக்கிறது”

என்ற தகவலை, நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஷிண்டே வெளியிட்டிருக்கிறார்.

உணவுக் கொள்முதலுக்காகக் கார்ப்பரேஷனுச்கு அரசு ரூ. 33 கோடி கடன் கொடுத்திருப்பதாகவும், மேலும் ‘ஸ்டேட் பாங்கி’யிலிருந்து ரூ. 10 கோடி பெற்றிருப்பதாகவும் அவர் கூறினர்.

# ‘சாது’க்கள் யார்?

“‘சா’ என்ருல் சாப்பாடு—‘து’ என்ருல் தூக்கம். இந்த இரண்டுக்கும் உரியவர்கள்தான் ‘சாது’க்கள் !

“இந்த நாட்டில் சாதுக்கள் என்பவர்கள் இத்தனைக் காலமாக நன்ருகச் சாப்பிட்டுத் தூங்கியிருக்கிறுர்களே தவிர, உருப்படியான சேவை எதையும் செய்யவில்லை.”

--சுத்தானந்த பாரதியார்

(கா. சுப்பிரமணிய பிள்ளை ஆராய்ச்சி அரங்கு துவக்க விழாவில்)

★

## ‘சாது’க்களின் ஆசை!

காங்கிரசுத் தலைவர்களில் தீவிரமான சோஷலிஸ்டு என்று கருதப்படும் முன்னுள் அமைச்சர் ஒருவரின் ஆதரவோடு இயங்கும் அனைத்திந்திய ‘சாது’க்கள் சமாஜத்தின் கருநாடகக் கிளை, அண்மையில் மைசூரில் தனது மாநாட்டை நடத்தியது.

‘எல்லாப் பள்ளிகளிலும் மதக் கல்வி அளிக்கப்பட வேண்டும்’ என்றும், ‘சமஸ்கிருதத்தைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்க வேண்டும்’ என்றும், ‘சதாச்சாரத்தை (நல்லொழுக்கத்தை)ப் பரப்புவதற்காக சாதுக்கள் இலவசமாக அரசாங்க பஸ்களில் சென்று வர அரசு அனுமதிக்க வேண்டும்’ என்றும் ‘சாதுக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரும்படி மாவட்ட அதிகாரிகளுக்கு அரசு உத்திரவிட வேண்டும்’ என்றும் மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

# இந்தியரின் பழமை மோகம்

“நான் இந்த நாட்டில் இரண்டு ஆண்டுகள் கழித்துவிட்டேன். நல்ல ஆங்கிலத்தில் இந்தியர்கள் மிக அழகாகப் பேசுவதைக் கேட்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. முன்னுல் இருப்பதைப் பார்ப்பதைவிட, பார்வையை எப்பொழுதும் பழமை பக்கமே திருப்பிவைத்துக்கொள்ளும் பழக்கம் பொதுவாக இந்தியர்கள் அனைவரிடமுமே உள்ளது”

என்று, சென்னையில் இங்கிலாந்து நாட்டின் துணைத் தூதுவராக உள்ள ஹீத்கோட்-ஸ்மித், பெங்களூரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## 375 பெண் எஞ்சினீயர்கள் !

இந்தியாவில் தற்போது 275 பெண் எஞ்சினீயர்கள் உள்ளதாக இந்திய விஞ்ஞானக் கழகம் நடத்திய ஒரு ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது; ஆண் எஞ்சினீயர்களின் தொகை 93,000 ஆகும்.

# அரசின் கொள்கையால்

## பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்படுவரா?

சென்னை, ஆக. 2—

‘பஸ்களைத் தேசியமயமாக்கும் தி.மு.க. அரசின் திட்டத்தால் யாரும் கடுமையாகப் பாதிக்கப்படப் போவதில்லை” என்று புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மாநிலத்தில் ஓடிக்கொண்டிருக்கும் 5,462 தனியார் பஸ்களில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் 800-க்கும் குறைவான பஸ்கள்தான் திரும்பப் பெறப்படவிருக்கின்றன.

பஸ் முதலாளிகளில் பெரும்பான்மையினர், ஒன்று—இரண்டு அல்லது ஐந்து பஸ்களை மட்டும் உடையவர்களாயிருக்கும் சிறு முதலாளிகளாவார்கள். இந்தப் பஸ்களும் பெரும்பாலும்குறைந்த தூரம் ஓடிக்கொண்டிருப்பவைகளாகும்.

மொத்தம் உள்ள 1,760 பஸ் முதலாளிகளில், 1,516 பேர் 75 மைல்களுக்கும் குறைவாக பஸ் ஓட்டுபவர்களாவர்.

மீதி உள்ளவர்களில் 187 பேர்களுக்கு 75-க்கும்—100-க்கும் இடையிலான மைல் தூரம் ஓட்டுவதற்கே அனுமதியுள்ளது.

41 பேர் 100-க்கும் 120-க்கும் இடையிலான மைல் தூரம் ஓட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளனர்.

16 பேர் மட்டுமேதான் 120 மைல் தூரத்துக்கும் மேல் ஓட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளார்.

அரசு. தனது குறைந்த பொருளாதார வசதியைக் கருதி, 75 மைல் தூரத்துக்குமேல் ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களை மட்டுமே எடுத்துக் கொள்ளவிருக்கிறது. ஏனெனில், இவைகள்தான் சிக்கனமாகவும் இலாபகரமாகவும் நடைபெறும் என்று கருதப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் இரண்டு முனைகளையும் இணைக்கும் விதத்தில், அரசு, பஸ் விட வேண்டுமென்று பலமான கருத்து நிலவுகிறது; ஏனெனில், இதற்கு அருகாமையிலுள்ள இரயில் நிலையம் திருநெல்வேலியில்தான் உள்ளது.

மாவட்டத்தின் எல்லாப் பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது.

அரசின் தேசியமயமாக்கும் திட்டத்தின்படி அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்கள் செங்கற்பட்டு மாவட்ட பஸ் உரிமையாளர்களாகத்தான் இருப்பர்.

இவர்களிடம் மொத்தம் உள்ள 260 பஸ்களில் 195 பஸ்கள் திரும்பப் பெறப்பட வேண்டியவைகளாயிருக்கும். இவற்றில் 103 பஸ்கள் 1968 மார்ச்சிலும், 81 பஸ்கள் 1969-லும் திரும்பப் பெறப்பட வேண்டியவைகளாகும்.

சென்னை நகரைத் தொட்டுக் கொண்டோ—சென்னையிலிருந்து ஆரம்பித்தோ ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களை முதலில் தேசியமயமாக்குவது என்பது, நிர்வாக வசதியை முன்னிட்டு முடிவு செய்யப்பட்டதாகும்.

மேலும், சென்னை நகருக்கு நாளும் வந்துபோகும் பிரயாணிகளின் வசதியைக்கருதி—அதிலும் குறிப்பாகச் சுற்று வட்டார இரயில் வசதியில்லாத சென்னையின் வடக்கு புறப் பகுதிகளில்--அதிகமான போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்றும் உணரப்படுகிறது.

பஸ் கட்டணத்தைக் குறைப்பது சம்பந்தமான போராட்டத்தில் இப்பொழுது அரசே வெற்றி பெற்றிருக்கிறது; ஏனெனில், அரசு, கட்டணத்தைக் குறைத்ததன் பயனுகப் பல தனியார் பஸ் உரிமையாளர்களும் பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

கிலோமீட்டர் ஒன்றுக்குக் கட்டணம் 3 காசுகளிலிருந்து 2-காசுகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

கட்டணத்தை ஒருமுகப்படுத்தும் முறையில் பஸ் உரிமையாளர்களும்—அரசும் விரைவில் ஒரு ஒப்பந்தத்திற்கு வரவிருக்கிறுர்கள். இது, கிலோமீட்டருக்கு 2¼ காசாக இருக்கக் கூடும்.

ஆனுல் இதுவரை திருநெல்வேலி பஸ் உரிமையாளர்களைத் தவிர வேறு யாரும் இந்தச் சமரசத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

“யாருக்கும் தொல்லை தர வேண்டுமென்பது அரசின் விருப்பமல்ல” என்று ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கிறது; ‘அனுமதி காலாவதியாகும் பஸ் உரிமையாளர்களுக்கு வேறு வழிகளில் பஸ் விட அனுமதி தரப்படும்’ என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முண்டமாகக் காங்கிரசு!

பாட்னு, ஆக. 1—

காங்கிரசுக் கட்சியின் இன்றைய நிலை குறித்து பீகார் துணை முதலமைச்சர் கா்புரி தாகூர் கூறிய விளக்கமாவது :—

“பல வட மாநிலங்களிலும் காங்கிரசல்லாத அமைச்சரவை ஏற்பட்டதன் காரணமாகக் காங்கிரசுக் கட்சி தனது தலையை இழந்துவிட்டது !

“தமிழகத்திலும், கேரளத்திலும் காங்கிரசு தோற்றதானது, அதன் கையையும் இழந்தது போலாகும் !

இப்பொழுது மத்தியப் பிரதேசத்திலும் காங்கிரசு அமைச்சரவை தோல்விபுற்றதானது, அது, தனது இருதயத்தையே இழந்ததற்கு ஒப்பாகும் !

ஆக, காங்கிரசு இப்பொழுது வெறும் முண்டம்போல் காட்சியளிக்கிறது ! அதுவும் இனி எத்தனை நாளைக்கு நிலைத்திருக்கப் போகிறதோ !”

# வார்தா

## கல்வி முறையால் தரம் குறைந்தது!

“கருநாடக மாநிலத்தில் கடந்த பல ஆண்டுகளாகத் துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு (காந்தியாரின் வார்தா திட்டப்படி) ‘அடிப்படைக் கல்வி’ தருவதாக அரசு கூறிவந்துள்ளது.

“இந்த முறையினுல் கல்வியின் தரம் குறைந்துவிட்டது; அதன் கட்டுக்கோப்பே குலைந்துபோய் விட்டது; மாணவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தருவதற்கு பழைய முறைகளே மீண்டும் பின்பற்றப்படலாம்”

என்று மாநிலக் கல்வித்துறைச் செயலாளர் டி. ஆர். ஜெயராமன் என்பவர், ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டுக் காங்கிரசார் பார்வைக்கு !

# இதுதான் காங்கிரசு! இவர்தான் காமராசர்!

“ஒரு காலத்தில் இந்திய மக்களின் இதயங்களோடு ஒட்டி உறவாடிய—ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்—இந்தியத் தேசீயக் காங்கிரசின் தலைவர்தான் காமராசர் !

“அந்த நாட்களில் காங்கிரசு, சாதாரண குடிமகனின் இதயத் துடிப்பை-ஆர்வக் கனலைப் பிரதிபலித்தது; இன்றோ, அவனுடைய அச்சம்—அவநம்பிக்கை—ஏமாற்றம் ஆகியவைகளையே பிரதிபலிக்கிறது ! தன் இலட்சியத்தை இழந்துவிட்ட காங்கிரசு, தன்னலக்காரர்களின் புகலிடம் ஆகிவிட்டது !

“1947 ஆகஸ்டு 15-ல் வெள்ளையர் வெளியேறிய பிறகு காங்கிரசின் வாழ்வே பறிபோயிற்று ! அதனுல்தான் இந்திய மக்கள் ‘பாபு’ என்று அன்புடன் அழைத்த மகாத்மா காந்தி, காங்கிரசைக் கலைத்துவிடுமாறு பரிந்துரைத்தார் !

“ஆனுல், காந்தியாரின் அந்த நல்ல அறிவுரையை நேரு ஏன் புறக்கணித்தார் என்பதை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை !

“விடுதலை இயக்கத்தின் முன்னேடியாய் நின்ற நாட்களில், காங்கிரசின் நடவடிக்கைகள் முழு வேகத்தில் முடுக்கிவிடப்பட்டிருந்தன; இன்றோ காங்கிரசு, விடுதலைக்கு முன்னுலே இருந்த வேகத்தை இழந்துவிட்டது (உப்புச்சப்பில்லாமல் இருக்கிறது) !

“அப்படிப்பட்ட கட்சித் தலைவரிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்க முடியும்? தனிப்பட்ட அளவில் காமராசர் பெரிதும் விரும்பத்தக்க மனிதர்; இயல்பான தம் அறிவால், தவறு செய்யாத உழவனைப்போல் முழுமையானவர் அவர் !

“காமராசருடன் காலந்தள்ளுவது வெகு எளிது; ஆனுல் அரசியலில் அவருக்கு மரியாதையே இல்லை ! ஏனென்ருல், ‘கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் ஓர் அரசியல் கட்சியின் சிதைவுண்ட எதிர்காலத்தை அவர் தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருக்கிறுர்’ என்றுதான் பொதுமக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறுர்கள் !

“அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், நடந்திருக்கக் கூடாத—ஆனுல் எதிர்பார்த்த காமராசரின் தோல்வி, பொது மக்களின் இந்த எண்ணத்தை உறுதிப்படுத்துவதாகவே அமைந்தது !”

—‘இல்லஸ்டிரேட்டட வீக்லி ஆப் இந்தியா’ (31—7—67) இதழில் அதன் ஆசிரியர் ஏ. எஸ். இராமன்.

# மாணவர்களை எதிர்நோக்கியிருக்கும் பணி

## முன்னுள் தலைமை நீதிபதி அறிவுரை

‘மாணவர்கள் தனி நபர்களை வணங்கிக் கொண்டிருக்காமல் தாங்களாக எதையும் எண்ணிப் பார்த்துத் தங்கள் நல்லொழுக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

“ஒவ்வொரு மாணவனும் நாட்டின் அரசியல் சட்டத்தையும், அதன் நோக்கங்களையும் நன்கு கற்றுணர்ந்து அதில் கூறப்பட்டுள்ளபடி ஒரு பொதுநல சமுதாயத்தை அமைக்கப் பாடுபட வேண்டும்.

“பட்டப் படிப்பின்போது அரசியலமைப்புச் சட்டம், ஒரு கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும்”

என்று முன்னுள் தலைமை நீதிபதி கே. சுப்பாராவ், பெங்களூரில் கல்லூரி மாணவர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

# விமானப் படையில் உளவு வேலைகள்

## நாடாளுமன்ற எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கவலை

புதுடில்லி, ஜூலை 31—

நாட்டில் குறிப்பாக விமானப் படையில் உளவு வேலைகள் அதிகரித்து வருவதாகச் சொல்லி நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

விமானப் பாதுகாப்புகள் பற்றிய இரகசியத் தகவல்கள் சீனு, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடம் சிக்கிவிடாமல் தடுக்க அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி அவர்கள் கேட்டனர்.

“உளவு வேலைகளைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு மேலும் பலப்படுத்தும்” என்று சவாண் உறுதி கூறினர்.

# உயிர் காக்கும் மருந்திலும் போலிச் சரக்கு !

பம்பாய், ஜூலை 31—

பம்பாய்க் கடைகளில் விற்கப்படும் ‘டிஸ்டில்டு வாட்டரி’ல் (நோயாளிகளுக்கு ஊசி மூலமாகச் செலுத்தும் மருந்தில் கலக்கும் நீர்) 75 சதவீதம் மட்டமானதென்றும், மீதி 25 சதவீதம்தான் நம்பிக்கையானது என்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துக் கூறியிருக்கிறது.

இந்த நிறுவனம் ஓரளவு அரசாங்கச் சார்புடையதாகும்.

எட்டுவிதமான ‘டிஸ்டில்டு வாட்டர்’கள் கடைகளில் விற்கப்படுவதாகவும், இவைகளில் இரண்டுதான் நம்பிக்கையானவையென்றும், மீதி ஆறும் போலியானவையென்றும் அது கூறுகிறது.

இவைகளில் குழாய் நீரும், கிணற்று நீரும் நிரப்பப்பட்டுள்ளனவாம் !

“மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படும் மிகப் பிரபலமான கம்பெனியின் ‘டிஸ்டில்டு வாட்டர்’ குழாய்—கிணற்று நீரைவிட மோசமானதாகும்”

என்றும் அந்த ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறது.

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, ஜூலை 22-க் தேதியுடன் முடிந்த வாரத்தில் ஒரு புள்ளி குறைந்து 703-ல் நின்றது.

# கள்ளச் சந்தையின் பிறப்பிடமாகக் கூட்டுறவுச் சங்கம்!

## காங்கிரசு ஆளும் மாநிலத்தின் நிலை---சட்டமன்றத்தில் அம்பலம்!

### எதிர்க் கட்சியினரோடு சேர்ந்து துணை அமைச்சரே சாடும் வெட்கக்கேடு!

அண்மையில் நடந்த மைசூர் மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தில் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களும், அரசினரின் செயலற்ற தன்மையும் உறுப்பினர்களின் கடுமையான தாக்குதல்களுக்காளாயின.

'ஒருவரை மற்ளொருவர் கொள்ளையடிப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல சாதனங்களாகிவிட்டன. தேவையில் தவிக்கும்போது மக்களைத் தனி நபர்கள் சுரண்டுவதற்குப் பதிலாக, அது, இப்போது நிறுவனங்களின் பெயரால் நடந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் வெறுங் கேலிக்கூத்தாக ஆகிவிட்டன''

என்ருர் — மல்லிகார்ச்சுனசாமி என்ற காங்கிரசு உறுப்பினர்; இவர் ஓர் உதவி அமைச்சரும் கூட!

"கூட்டுறவு இயக்கம் குறித்து ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளையெல்லாம் பேராசை பிடித்த வியாபாரிகள் காற்றிலே பறக்கவிட்டுவிட்டார்கள்; அவை இலாப நோக்குடன் நடத்தப்படும் நிறுவனங்களாகிவிட்டன; விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதில் அவை முழுக்கத் தோற்றுவிட்டன! ஊழல்களுக்கும் கள்ளச் சந்தைக்கும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பிறப்பிடமாகிவிட்டன!''

இவை, எதிர்க் கட்சித் தலைவர் சிவப்பா தெரிவித்த கருத்துக்கள்.

"உணவுப் பண்டங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கள்ளச் சந்தைக்கு வருகின்றன''

என்று கூறினுர் இடினப்பா என்ற காங்கிரசு உறுப்பினர்!

"கூட்டுறவுச் சங்கங்களைச் சரியான முறையில் இயங்க வைப்பதற்காக அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களின் பரிந்துரைகளை அரசு புறக்கணித்துவிட்டது''

என, கே. எச். பாட்டில் என்ற ஜன சங்க உறுப்பினர் குற்றஞ்சாட்டினுர்.

# தவிட்டுக்குள் பதுக்கப்பட்டிருந்த அரிசி, மைதா மூட்டை

## ரூ. 10,000 பெறுமான சரக்கு பறிமுதல்

திண்டுக்கல் நகர் மேட்டுப்பட்டியில் உள்ள ஓர் அரிசி ஆலையிலும், பழனி சாலையில் உள்ள ஓர் கட்டிடத்திலும் குவித்து வைக்கப்பட்டிருந்த தவிட்டுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த சுமார் ரூ. 10,000 பெறுமானமுள்ள 83 மூட்டை அரிசியும், நான்கு மூட்டை மைதாவும் கண்டுபிடிக்கப்பட்டு தி. மு. க. தோழர்களான பொன். சீனிவாசன், எஸ். ஏ. இராசன், கு. செயராசு, மைக்கேல், பாலு ஆகியோர் இரவு முழுவதும் கண் விழித்திருந்து மறுநாள் காலை திண்டுக்கல் நகர உணவு சப்ளை அதிகாரி நாகேந்திர ராவுக்கும், உதவி உணவு சப்ளை அதிகாரி வி. இராமசாமி அவர்களுக்கும் தகவல் கொடுத்தனர்.

அதன்பேரில் அதிகாரிகள் அங்கு சென்று, 83 மூட்டை அரிசியையும், நான்கு மூட்டை மைதாவையும் கைப்பற்றினர்.

தவிட்டுக்குள்ஒளித்துவைத்திருந்ததை கழகத் தோழர்கள் வெட்டி வெளியே கொண்டுவந்து வண்டிகளில் ஏற்றினர். இதை ஏராளமான பொதுமக்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

கைப்பற்றிய மூட்டைகளை பறிமுதல் செய்ததாக அறிவிக்கப்பட்டது. மேற்படி மூட்டைகளுக்கு இதுவரை சொந்தம் என்று கூற யாரும் முன்வரவில்லையாம்.

# தமிழகத்திற்குக் கேரளத்து நீர்

## நம்பூதிரிபாடு தகவல்

திருவனந்தபுரம், ஆக. 2—

"பெரியாறு—சாலக்குடி—பரதப்புழா ஆகிய நதிகளிலிருந்து கேரளம், தமிழகத்திற்குத் தண்ணீர் தருகிறது; மேலும் அதிக அளவில் தண்ணீர் தரும் பிரச்சினை விவாதக் கட்டத்தில் இருக்கிறது''

என்று, கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

# மாநில அரசுகளுக்கு மொரார்ஜியின் கண்டிப்பு

புதுடில்லி, ஆக. 2—

"மத்திய அரசிடம் வாங்கியுள்ள கடன்களை மாநிலங்கள் திருப்பிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்; இந்தக் கடன்களை, செலவுக் கணக்கில் எழுதிவிட முடியாது; அவற்றை மானியமாகவும் கருதமுடியாது; இதை எல்லா மாநிலங்களும் உணர வேண்டும்; இல்லாவிடில், எதிர்காலத்தில் மத்திய அரசு மாநிலங்களுக்குக் கடன் உதவியளிப்பது வசதியாக இராது"

என்று நாடாளுமன்ற மேலவையில், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறினுர்.

"மத்திய அரசே கடன் வாங்கித்தான் மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிறது'' என்றும் அவர் கூறினுர்.

"மாநிலங்கள் கடனைத் திருப்பித் தரவில்லையென்ருல், எதிர்காலத்தில் அவர்களுச்கு எப்படி கடன் கொடுக்க முடியும்? மேலும் மாநில அரசுகள் தாம் மற்றவர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு வட்டி வாங்கவில்லையா?'' என்றும் அவர் கேட்டார்.

# கலைக்கப்பட்ட நெல்லை நகராட்சி

## மீண்டும் இயங்க நடவடிக்கை

சென்னை, ஆக. 2—

முன்னைய காங்கிரசு ஆட்சியினரால் கலைக்கப்பட்ட நெல்லை நகராட்சிமன்றம் மீண்டும் இயங்கத் துவங்குமென்றும், தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய திருத்தச் சட்டத்தின்படி ஆட்சேபணைகளைத் தெரிவிக்க நான்கு வார காலம் அவகாசம் அளித்து நெல்லை நகராட்சி அமைப்புப் பற்றிய அரசின் அறிவிப்பு விரைவில் அரசிதழில் வெளியிடப்படுமென்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# துலுக்கப் பட்டி சிமெண்டு ஆலைத் தகராறு

## சமரசம் காண மாநில அரசு ஏற்பாடு

சென்னை, ஆக. 2—

மதுரைக்கு அடுத்த துலுக்கப் பட்டியில் உள்ள சிமெண்ட் ஆலைத் தகராறில் சமரசம் காண மாநில அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.

தொழிலாளர்களுக்கும்—நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக மேற்படி ஆலை கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் துறை அமைச்சர் செ. மாதவன், நிர்வாகத்தினரும்—தொழிலாளர் பிரதிநிதிகளும் இதுகுறித்து விவாதித்து முடிவு காண வேண்டும் என்று யோசனை கூறியுள்ளார்.

★

# கோவை டெக்ஸ்டூல் கம்பெனி கதவடைப்பு

## 4,000 தொழிலாளர் பாதிப்பு

கோவை, ஆக. 2—

நூற்பாலைக்கான கருவிகளை உற்பத்தி செய்யும் டெக்ஸ்டூல் கம்பெனி, 'கதவடைப்பு'ச் செய்வதாக நேற்று இரவு அறிவித்தது.

தொழிலாளர்சள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்ததனுல் இப்படிக் கதவடைப்புச் செய்வதாகக் கம்பெனி நிர்வாகம் அறிவித்தது.

இதில் 4,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

'விசுவாச ஊழியர்'கள் பணி செய்வதைச் சில தொழிலாளர்கள் எதிர்த்ததனுல்தான், வழக்கமான முறையில் தொழிற்சாலை இயங்க முடியாமலிருக்கிறது என்றும், அலுவலகத்திலிருந்து அதிகாரிகள் வருவதற்கும் போவதற்கும் தொழிலாளர்கள் தடங்கல் செய்துள்ளனர் என்றும் நிர்வாகத்தினர் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

நேற்று சம்பளப் பட்டுவாடாவின்போது, வேலைசெய்யாமலிருந்த நாட்களுக்கும் நட்ட ஈடு தரவேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்டதாகவும், ஆனுல் பொருளாதார நிலைமையைக் கருதியும், மேலும் பிரச்சினை தொழிலாளர் கமிஷனரின் பரிசீலனையில் இருப்பதனுலும், தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்பதற்கில்லை என்றும் நிர்வாகம் கூறியிருக்கிறது.

# பிர்லாவின் வீடுகளில் சோதனை

## பல இடங்களில் நடைபெற்ற 935 சோதனையில் ரூ. 130 கோடி கறுப்புப் பணம் கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஆக. 2—

"பிர்லா நிறுவனங்கள் வருமான வரியை ஏய்த்தது சம்பந்தமாக அரசுக்கு எத்தகவலும் கிடைக்கவில்லை; ஆகையால் இது சம்பந்தமாக எந்தச் சோதனையும் நடைபெறவில்லை''

என்று, நாடாளுமன்ற மேலவையில் பதிலளிக்கையில் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டார்.

"உறுதியான தகவல்கள் கிடைக்குமானுல் அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்கும்''

என்றும் அவர் கூறினுர்.

இதற்குமுன் பதிலளித்த துணை அமைச்சர் கே. பி. பந்த், 'பிர்லாவின் சில வீடுகள் சோதனை செய்யப்பட்டிருக்கின்றன; ஆனுல் அவை, வருமான வரி சம்பந்தமாக அல்ல' என்றும் கூறினுர்.

மேலும் அவர், 1966—67-ல் மொத்தம் 935 சோதனைகள் பல நிறுவனங்களிலுமாக நடைபெற்றிருப்பதாகவும், இதனுல் ரூ. 130 கோடி கணக்கில் காட்டாத வருமானம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறினுர்.

# இரண்டு மணி நேரம் தொடர்ந்து சாட்சியமளித்தார் எம்.ஜி.ஆர்.

சென்னை, ஆக. 2—

புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர். அவர்களைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக நடிகர் எம். ஆர். இராதாமீது தொடரப்பட்டுள்ள வழக்கு இன்றும் தொடர்ந்து சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது.

திரு. எம். ஜி. ஆர். தொடர்ந்து 2 மணிநேரம் சாட்சியமளித்ததால் களைப்புற்ருர்.

தாம் மிகவும் களைப்புற்றிருப்பதாகவும் தொடர்ந்து சாட்சியமளிக்க இயலாத நிலைமையில் இருப்பதாகவும் எம். ஜி. ஆர். அரசுத் தரப்பு வழக்குரைஞரிடம் கூறினுர்; உடன் அரசு வழக்குரைஞர் நீதிபதியிடம் தெரிவித்தார்.

அதைக் கேட்டதும் நீதிபதி, எம். ஜி. ஆர். அவர்களை நோக்கி, 'விசாரணையை இப்போது நிறுத்திவிட்டு மாலை நடத்தலாமா?' என்று கேட்டார்; அதற்கு எம். ஜி. ஆர். 'எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது; மாலை வேண்டாம்; நாளை வைத்துக்கொள்ளலாம்' என்ருர்.

அதனுல் காலை 11-30மணிக்குத் தொடங்கிய விசாரணை பகல் 1-30 மணியுடன் முடிவடைந்தது.

வியர்வை கொட்டும் முகத்துடன் எம். ஜி. ஆர். கூண்டிலிருந்து கீழே இறங்கினுர். உடன் பக்கத்து அறைக்குச் சென்று சற்று ஓய்வெடுத்துக்கொண்டபின் வீட்டிற்குப் புறப்பட்டார்.

# கள்ள வாணிபத்தைத் தடுக்க கடும் நடவடிக்கை

## வணிகர்—நிலவுடைமையாளருக்கு பீகார் முதல்வரின் எச்சரிக்கை

பாட்னு, ஆக. 2—

"உணவுத் தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்தும், கள்ள வணிகம், மற்றும் பதுக்கல் நடவடிக்கைகளைத் தடுக்கவும் அரசுடன் ஒத்துழைக்கத் தவறினுல், அரசே உணவுத் தானிய வணிகத்தை மேற்கொள்ளும்''

என்று, பீகார் உணவமைச்சர் கபில்தேப்சிங், வணிகர்களையும், பெரும் நில உடைமையாளர்களையும் எச்சரித்தார்.

தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் பல வணிகர்களும், நிலவுடைமையாளர்களும் கைது செய்யப்பட்டதைப் பற்றி அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

"அந்தச் சட்டத்தின்கீழ் சிலரே கைது செய்யப்பட்டுள்ளனர். நான் வணிகர்களுக்கு எதிரி அல்ல; அவர்களைத் துன்பப்படுத்தவேண்டுமென்பது என் நோக்கமில்லை''

"தேவையான எல்லா முறைகளையும் கையாண்டு விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதே எங்களது நோக்கமாகும்."

# தொடர்கிறது தீவிபத்து

சென்னை, ஆக. 2—

இன்று கோடம்பாக்கம் சாலைக்கு அருகிலுள்ள பத்திரிகரை என்னும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரு குடிசை நாசமாயிற்று.

# நடக்க இருப்பவை

## 5--8--67

### சென்னை 8-வது வட்டம்

மக்கள் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு பனைமரத்தொட்டி அம்மன கோயில் எதிரில்; தலைவர்: பி. குப்புசாமி; பேசுவோர்: வே. கண்ணன், எஸ்.பி. சற்குணம், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., இரா. மு. மனேகரன், கு. இராமலிங்கம் எம்.சி.

### கீழ உழுவூர்

தி.மு.க. சார்பில் எல். கணேசன் எம்.எல்.ஏ. மற்றும் வைரம் தியாகு ஆகியோருக்குப் பாராட்டு; மாலை 5-மணிக்கு; தலைவர்: யா. சே. சேவியர், பாராட்டுவோர்: சி. தமிழரசி பி.ஏ., கிரேசி சேவியர், ஆண்டியப்பன், துரையரசன், இராமச்சந்திரமூர்த்தி, செகதீசன், நாகராசன், வைத்திலிங்கம், அன்புவீரன், பொற்கோவன், இராமையன், சு. கோவிந்தராசன்.

### பெங்களூர் 13-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு 2-வது கிராஸ் கோபாலபுரம் மாகிடி ரோடில்; தலைவர்: ஜி. குப்புசாமி; பேசுவோர்: வி.எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., திராவிடமணி, எஸ். வி. பதி, எஸ்.என். நாராயணன், நரசிம்மன். ஏ. வைரக்கண்ணன், எஸ், நடாாசன், அம்மையம்மாள்.

# கவரைப்பேட்டை உயர்நிலைப் பள்ளி

## அமைச்சர் நெடுஞ்செழியன் துவக்கிவைக்கிருர்

கும்மிடிப்பூண்டித் தொகுதி கவரைப்பேட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளித் துவக்க விழா 4—8—67 இரவு 7½ மணிக்கு நடைபெறும்; தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல். தலைமைவகிப்பார்; கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைப்பார்; ஊராட்சி மன்றத் தலைவர் ஒபுல் ரெட்டி, துணைத் தலைவர் பி. கே செயராம(முதலியார்), மாவட்ட ஆட்சித் தலைவர் கே. இலட்சுமி காந்த பாரதி, கோட்டக் கல்வி அதிகாரி திருமதி காந்திமதி ஆகியோர் கலந்துகொள்வர்.

# வெ. கண்ணன்

## சுற்றுப்பயணம்

ஆக. 5: சென்னை; 6: கோவை (2-வது வட்டம்); 7: கரூர்; 8: சிவகிரி; 9: சென்னிமலை; 10: கோவை (11-வது வட்டம்); 11: தாராபுரம்; 12: பந்தநல்லூர்; 13: குடந்தை; 14: அத்திக்கரை; 15: கொண்டையம்பாளையம்; 16: ஈரோடு வட்டம்; 17: திருப்புவனம்; 19: எண்ணூர்; 20: பெங்களூர்.

முகவரி:—வெ. கண்ணன், எண்2, பராங்குசபுரத் தெரு, கோடம்பாக்கம், சென்னை-24.

# பஞ்சப் படி மட்டும் ரூ. 196.71

ஆமதாபாத், ஆக. 1—

ஆமதாபாத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஆகஸ்டுத் திங்களுக்கு ரூ. 196.71 பஞ்சப் படி கிடைக்கிறது.

இதுவரையில் இவ்வளவு தொகை அவர்களுக்குக் கிடைத்ததே இல்லை.

சென்ற திங்களைவிட இத்திங்கள் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் 15 புள்ளி அதிகமாகி இருப்பதே இவ்வுயர்வுக்குக் காரணம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.